வருகின்றபோது 16 ஆம் தேதியே அந்த அலுவலகமும், பணிமனையும் திறக்கப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன்.

திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குடி தொகுதி, ஆலங்குடியில் பணிமனை திறக்க வேண்டுமென்று சொல்லி மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பல முறை ஒப்புக்கொண்டு, சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி கொடுத்தால் செய்யப்படும் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி கொடுக்கப்பட்டு, இப்போது பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. காலையில்கூட மாண்புமிகு அமைச்சர் அவர்களைச் சந்தித்து இதுசம்பந்தமாகக் கேட்டேன். அவரும் இந்த மாதத்திற்குள் திறந்துவிடுவோம் என்று சொன்னார். ஆகவே, வருகின்ற 28 ஆம் தேதிக்கு முன்னால் ஆலங்குடியில் பணிமனையைத் திறக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் அந்தப் பணிமனையைத் திறக்க ஆவன செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

34—

தொழிற்சாலை

***25819—திரு. எம். அன்பழகன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 9]

பழனியில் தலைமுடி அதிகம் கிடைப்பதால் அங்கு ஆயத்த முடி (டோப்பா) தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திண்டுக்கல் மாவட்டம், பழநியில் ஆயத்த முடி (டோப்பா) தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன்.

திரு. எம். அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்திற்கு கடந்த ஆண்டு பொறியியல் கல்லூரியும், இந்த ஆண்டு மருத்துவக் கல்லூரியும் வழங்கியதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் எங்கள் பாசத்திற்குரிய தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அண்ணன் தளபதி அவர்களுக்கும், நிதி வழங்கிய இனமான நிதி அமைச்சர் அவர்களுக்கும், திண்டுக்கல் மாவட்ட மக்களின் சார்பில் நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன்.

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் பக்தர்கள் தருகின்ற முடி காணிக்கை நாளுக்குநாள் அதிகரிக்கிறது. புகழ்பெற்ற இத்திருக்கோயிலுக்கு கடந்த ஆண்டு ஆண்கள் மற்றும் குழந்தைகள்மூலம் சுமார் 10 டன்னும், பெண்கள்மூலம் சுமார் 5 ஆயிரம் கிலோவும் கிடைக்கப்பெற்றன. சமயபுரத்தில் பெண்கள் முடி காணிக்கையாக 7 ஆயிரம் கிலோவும், இருக்கன்குடியில் 2 ஆயிரம் கிலோவும், திருச்செந்தூரில் 2 ஆயிரம் கிலோவும், ஆண்கள் மற்றும் குழந்தைகளின் முடி சுமார் 25 டன்னும் ஆண்டுக்குக் கிடைக்கிறது.

பெண்களின் கூந்தலுக்கு மணம் உண்டோ, இல்லையோ! நல்ல விலை உண்டு. சுமார் 5 ஆயிரம் முதல் 25 ஆயிரம் வரை முடி விலை போகிறது. எனவே, தென் தமிழகத்தில் கிடைக்கின்ற இந்த முடிகளையெல்லாம் கருத்திற்கொண்டு, பழனியை மையமாக வைத்து வேலைவாய்ப்பினை உருவாக்கித்தரும் முகமாக பழனியில் டோப்பா தயாரிக்கும் தொழிற்சாலையை அமைக்க மாண்புமிகு அமைச்சர்

[2011 பிப்ரவரி 9

அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயத்த முடி தயாரிக்கும் தொழிற்சாலையை அமைக்க சுமார் ஒரு கோடி ரூபாய் முதலீடு தேவைப்படுகிறது. ஆயத்த முடி தயாரிக்க ஆண்டு முழுவதும் 120 மெட்ரிக் டன் முடி தேவைப்படும். ஆனால், பழனியில் வருடத்திற்கு 2 டன் அளவே தலைமுடி கிடைக்கிறது. ஆயத்த முடி தொழிற்சாலைக்கு ஒருநாள் உற்பத்தி 500 கிலோ, அதாவது 10 அங்குலம் முதல் 27 அங்குலம் வரை நீண்ட முடி தேவைப்படுகிறது. ஆனால், பழனி தண்டாயுதபாணி திருக்கோயிலில் நாள் ஒன்றுக்கு சராசரியாக 7 கிலோ மட்டுமே முடி கிடைக்கிறது. அதாவது 1 கோடி முதலீட்டில் ஒரு தொழிற்சாலையை அமைத்தால் வருடத்திற்கு அதிகபட்சமாக ஒருவாரம் மட்டுமே உற்பத்தி செய்ய இயலும் என்ற நிலையில், இத்தொழிற்சாலையை பழனியில் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன்.

திரு. எம். அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடியிலுள்ள ஆக்ஸிஜனைப் பயன்படுத்தி சீனா, செடிகளுக்கு உரம் தயாரிக்கின்றது. மேலும் முடியிலுள்ள புரோட்டீனைப் பயன்படுத்தி சீனாவில் கருப்பு நிறத்தில் சோயா சாஸ் தயாரிக்கின்றார்கள். அமெரிக்காவில் முடியை கல் போன்ற திடப் பொருளாக மாற்றி, வீடுகளிலும், அலுவலகங்களிலும் பயன்படுத்தக்கூடிய ஃபர்னிச்சர்களாகத் தயாரிக்கின்றார்கள். தற்போது முடியிலிருந்து கோட்டுகள் தயாரிக்கக்கூடிய நிலை வந்திருக்கிறது. கடலில் கலக்கும் எண்ணெய்யைப் பிரித்தெடுப்பதற்கு முடி ஒரு சிறந்த மூலப்பொருளாக நாசாவினால் இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

நமது நாட்டில் கயிறு திரிக்கிறோம். விக் மற்றும் டோப்பா போன்றவை தயாரிக்க முடியைப் பயன்படுத்துகிறோம். சென்னையில்

2011 பிப்ரவரி 9]

மட்டுமே டோப்பா தயாரிக்கும் 11 தொழிற்சாலைகள் உள்ளன. சென்னையிலே உள்ள தொழிற்சாலைகளின் வேலைகள் அங்கிருந்து பெறப்படுகிற முடியிலிருந்துதான் நடைபெறுகின்றன. ஆகவே, அதிகமாக முடி கிடைக்கும் தென் தமிழகத்தினுடைய, திருச்சி, திருநெல்வேலி போன்ற இடங்களிலே உள்ள கோயில்களையெல்லாம் ஒருங்கிணைத்து, அதற்கு பழனியை மையமாக வைத்து, டோப்பா தொழிற்சாலையை அமைக்க அரசு மறு பரிசீலனை செய்ய முடியுமா, முடியாதா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மேம்பாட்டு சட்டத்தின்கீழ் விதிகளில் குறிப்பிட்டுள்ள தகுதியான இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களுக்கு 15 சதவீதம் முதலீடு வழங்குகின்ற திட்டம் இந்த அரசால் செயல்படுத்தப்படுகிறது. மேலும், மாவட்டத் தொழில் மையத்தால் தொழில் வகை பதிவறிக்கைமூலம், மின்னிணைப்புக்கு வழங்கப்படும் 20 சதவீதம் மானியம், சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கும் வழங்கப்படுகிறது. தனியார்கள் யாராவது முன்வந்தால், இந்தச் சலுகைகளையெல்லாம் பயன்படுத்தி டோப்பா தயாரிக்கும் தொழிற்சாலையை அங்கு ஆரம்பிக்கலாம்.

முடியினுடைய பயன்பாடுகளைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். தலைமுடிமூலமாக ஆயத்த முடியைத் தயாரிக்கலாம். தலைமுடி, அழகுப் பொருள் என்பதைத் தவிர, அதனை தோட்டங்களுக்கு உரமாகவும், நவீன ஆடை தயாரிக்கவும், அறைகலன்கள் தயாரிக்கவும், கயிறு தயாரிக்கவும், பறவை மற்றும் எலிகளுக்கு கூடுகள் தயாரிக்கவும், சோயா சாஸ் தயாரிக்கவும், மேலும் மேலை நாடுகளிலே இதை பேக்கரி பொருட்களிலேயும் உபயோகம் செய்கிறார்கள். ஆகவே, உறுப்பினருடைய யோசனையை இந்த அரசு எதிர்காலத்திலே பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சின்னதுரை, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.